

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்டம் சேப்பாக்கம் பகுதி தி.மு.க. சார்பில் உணவு வழங்கும் நிகழ்ச்சி சிந்தாதிரிப்பேட்டையில் நடந்தது தயாநிதி மாறன் எம்.பி., மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு, சென்னை மாநகராட்சி மண்டல குழு தலைவர் மதன் மோகன் கலந்துகொண்டு உணவு வழங்கினர். உடன் வட்ட செயலாளர் மகேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### சென்னை தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர்

## மு.கா.கதிரவன் சகோதரர் கே.தமிழரசன் நினைவு நாள் படத்திறப்பு!

### ஒன்றிய துணைச் செயலாளர் வழக்கறிஞர் த.மனோநிதி தலைமை!



சென்னை,ஜுன்.17-
சென்னை தெற்கு மாவட்டம், வேங்கை வாசல் ஊராட்சி 22, காயிதேமில்லத் தெரு, சந்தோஷபுரம், சென்னை 73-ல் வசிக்கும் தமிழ்நாடு அரசு கல்லூரி கல்வி துறை முன்னாள் தலைவர் மு.காளிமுத்து புதல்வரும், சென்னை தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் மு.கா. கதிரவன் தம்பி மறைந்த கே. தமிழரசன் நினைவு நாள் நிகழ்ச்சி (இன்று 17.6.2023) சனிக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சி வேங்கை வாசல் ஊராட்சி கழக செயலாளர் மற்றும் ஒன்றிய துணைச் செயலாளர் வழக்கறிஞர் த.மனோநிதி தலைமையில் நடைபெறுகிறது.

கிளைக் கழகச் செயலாளர்கள் டி.பாஸ்கர், ஸ்ரீதர் ஸ்டாலின், ஆனந்தன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

உதவும் கரங்கள் அனாதைகள் இல்லத்தில் சுமார் 200 பேருக்கு உணவு வழங்கப்படுகிறது. இந்நிகழ்ச்சியில் கழகத் தோழர்கள் கலந்து கொள்கின்றனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (16.6.2023) சென்னை எழும்பூர் காவல் மருத்துவமனையில் காவல் மருத்துவமனை மேலாண்மை மென்பொருள் காவலர் நலன் திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் சென்னை பெருநகர காவல் ஆணையாளர் சங்கர் ஜிவால், கூடுதல் ஆணையாளர் லோகநாதன், இணை ஆணையாளர் திருமதி சாமுண்டீஸ்வரி மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருவாரூர் 'கலைஞர் கோட்டம்' திறப்பு விழாவில்

## கடலூர் கிழக்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாகப் பங்கேற்பீர்!

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!



கடலூர், ஜுன் 17 -
கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

20.6.2023 செவ்வாய்க்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு உலகத் தமிழினத்தின் உன்னதத் தலைவராகத் திகழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி திருவாரூர் மாவட்டம், காட்டூரில் திருமதி.தயாளு அம்மாள் அறக்கட்டளை சார்பில் கட்டப்பட்டுள்ள கலைஞர் கோட்டம் மற்றும் கலைஞர் அவர்களின் சிலை திறப்பு விழா கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் மேற்கண்ட நிகழ்ச்சிகளில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாநகர மேயர், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள், மாவட்ட ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, இலக்கிய அணி, கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, விவசாயஅணி, விவசாய தொழிலாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக் குழு, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு, விளையாட்டு மேம்பாட்டு அணி, சுற்றுச்சூழல் அணி, அமைப்புசாரா தொழிலாளர் அணி, அயலக அணி, தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தி.மு.க. தலைமைக் கழக செய்தித் தொடர்புக்குழு மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### செய்தி தொடர்புச் செயலாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் அறிவிப்பு!

தி.மு.க. செய்தி தொடர்புக்குழுவின் மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 01-07-2023 - சனிக்கிழமை, காலை 10 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் செய்தி தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் கழக செய்தி தொடர்புக்குழு மாநில நிர்வாகிகள் மற்றும் ஊடக விவாதங்களில் கழகத்தின் சார்பில் கலந்து கொள்வோர் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்** : 1. தமிழினத் தலைவர் கலைஞர்அவர்களின் நூற்றாண்டு
2.2024 -மக்களவைத் தேர்தல் குறித்து.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை-18.
நாள்: 16.6.2023.

**பேரா. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன்**
தி.மு.க. செய்தி தொடர்பு செயலாளர்



சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 43(அ) வட்ட திமுக சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் நல உதவிகள் வழங்குதல் நிகழ்ச்சி வட்டச் செயலாளர் வீ.வடிவேல் தலைமையில் நடைபெற்றது.ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, முன்னிலை வகித்தார்.இரா.லட்சுமணன் வரவேற்புரையாற்றினார். கூட்டத்தில் சைதை சாதிக் சிறப்புரையாற்றினார். மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா, கலாநிதி வீராசாமி எம்.பி,நந்தனம் நம்பிராஜன்,நலதிட்ட உதவி வழங்கினர். உடன் இரா.மதிவாணன், எஸ். ஜெபதாஸ்பாண்டியன், ஆர்.வெற்றிவீரன், நேதாஜி யு.கணேசன் உள்ளிட்ட மாவட்ட பகுதி வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### வட சென்னை கூட்டுறவு மொத்த

## விற்பனை பண்டக சாலை சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா!

### தா.இளைய அருணா - மு.ஜெயச்சந்திரன் - நா.ஜீவா பங்கேற்பு!

சென்னை,ஜுன்.17-
வடசென்னை கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையின் சார்பில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாள் விழா நாம்கோ தொ.மு.ச. அலுவலகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பொதுச்செயலாளர் மு. ஜெயச்சந்திரன் செய்துள்ளனர். வரவேற்புரை நா.ஜீவா தலைவர் தலைமையில் பொதுச்செயலாளர் மு.ஜெயச்சந்திரன் சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா 500 பேருக்கு சமபந்தி உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர்மு.கோபி பொதுக்குழு உறுப்பினர் சண்முகம், மேற்குபகுதி செயலாளர் வா.பே.சுரேஷ், வட்டச்செயலாளர் எஸ்.புகழேந்தி 49வது வட்டச்செயலாளர் லோ.சீனிவாசன் மற்றும் நாம்கோ நிர்வாகிகள் ச.தரணி, மு.திருநாவுக்கரசு, ப. செல்வி, மா ராமதாஸ், ஏ.இளங்கோவன், கோ. யோகேஸ்வரன், ர.பொற்கொடி, மு.குப்பம்மாள் து.சிட்டிபாபு, மு.டில்லி, கோ.பாண்டியன், பெ.கோபால் வி.ராஜேந்திரன், சு.அமுதா சி.கதிர்வேலு ச.மணி பா.ஸ்ரீகாந்த், ஸ்ரீ.நிஜந்தன் கி.ஜானகிராமன் ஆ.உஷா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இ.பிரபு நன்றி கூறினார்.



சென்னை வடகிழக்கு மாவட்டம்,திருவொற்றியூர் மத்திய பகுதி தி.மு.க. சார்பில் பகுதிச் செயலாளர் ஏ.வி.ஆறுமுகம் ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 1001 நபர்களுக்கு அறுசுவை உணவு பிரியாணி, மற்றும் இனிப்பு வழங்கப்பட்டது, மேலும் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. விழாவினை கழகக் கொடியேற்றி தொடங்கி வைத்தார், நிகழ்ச்சியில் கலாநிதி வீராசாமி எம்.பி., கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., முத்துசாமி, சாலை டி.கணேசன், மு.செல்வம், தச.கரிகால சோழன், கணேசன், தி.விக்னேஷ் மற்றும் கழக முன்னோடிகளும் பெருந்திரளாக கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.எம்.எஸ்.நாகலிங்கம் நன்றி கூறினார்.


# நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## பொதுமக்கள் மற்றும் கழிவுநீர் லாரி இயக்குபவர்களின் கவனத்திற்கு

**கழிவுநீர்த் தொட்டியின் உள்ளே மனிதர்களை இறங்க அனுமதிக்க கூடாது,**
**உரிமம் பெறாத லாரிகளை கழிவு நீரகற்றும் பணியில் ஈடுபடுத்தக்கூடாது.**
**திறந்தவெளி மற்றும் நீர்நிலைகளில், கழிவுநீரை வெளியேற்றக் கூடாது.**



மனித கழிவுகளை அகற்றும் தொழில் புரிவோர் தடுப்பு மற்றும் அவர்களது மறுவாழ்வு சட்டம் 2013 (PEMSR Act, 2013)-ன் படி கழிவுநீர்த் தொட்டியில் எந்தவொரு சூழ்நிலையிலும் இறங்குவது தடை செய்யப்பட்டுள்ளது. கழிவுநீர்த் தொட்டியினை இயந்திரங்களை கொண்டு மட்டுமே சுத்தம் செய்ய வேண்டும்.





PEMSR Act, 2013 பிரிவு 7-ன்படி எந்தவொரு நபரோ, உள்ளாட்சி அமைப்போ அல்லது எந்தவொரு நிறுவனமோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்தவொரு பணியாளரையும் அபாயகரமான கழிவுநீர் கட்டமைப்புகளை / கழிவுநீர்த் தொட்டிகளை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபடுத்த கூடாது.

இதனை மீறுவோர் மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



**முதன்முறையாக மீறினால் இரண்டு ஆண்டு சிறைத் தண்டனை அல்லது இரண்டு இலட்சம் ரூபாய் அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்தோ விதிக்கப்படும்.**

**இரண்டாவது முறை மீறினால் ஐந்து ஆண்டு சிறைத் தண்டனை அல்லது ஐந்து இலட்சம் ரூபாய் அல்லது இரண்டும் சேர்ந்தோ விதிக்கப்படும்.**



கழிவுநீர் கட்டமைப்பு மற்றும் கழிவுநீர் சேகரிப்பு தொட்டியை சுத்தம் செய்யும் போது உயிரிழப்பு ஏற்பட்டால் இப்பணியில் ஈடுபடுத்திய உரிமையாளர் / ஒப்பந்ததாரர் / பணி அமர்த்தியவர்கள் மீது **PEMSR Act 2013**-ன் படி மற்றும் இந்திய தண்டனை சட்டத்தின்படி, மற்றும் நடைமுறையில் உள்ள இதர சட்டங்களின்படியும் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை (நிலை) எண்.83 நாள் 07.06.2022-ன் படி **15 இலட்சம் ரூபாய் இழப்பீடாக இறந்த பணியாளரின் வாரிசுதாரருக்கு வழங்கப்பட வேண்டும்.**



அரசாணை (நிலை) எண்.183 நாள் 31.12.2022 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள், சென்னைப் பெருநகரப் பகுதி கழிவுநீர் மேலாண்மை (ஒழுங்குமுறை) விதிகள் / 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புக்கள் விதிகளின்படியும் அனைத்து கழிவுநீர் லாரிகளும் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் மற்றும் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து உரிமம் பெற வேண்டும்.



உரிமத்தில் குறிப்பிட்டுள்ள கழிவுநீர் உந்து நிலையங்கள் மற்றும் சுத்திகரிப்பு நிலையங்களில் மட்டுமே கழிவுநீரை வெளியேற்ற வேண்டும்.



அனைத்து கழிவுநீர் லாரிகளும் முறையான பராமரிப்புடன், இருக்க வேண்டும். லாரிகளின் இயக்கங்கள் GPS கருவிகள் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்படும்.



பொது மக்கள் 14420 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு கழிவுநீர் தொட்டி சுத்தம் செய்யும் சேவையினை 19.06.2023 முதல் பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளிலும் 30.06.2023 முதல் அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் உரிமம் பெற்ற லாரிகள் மூலம் அதற்கான கட்டணத்தை செலுத்தி இச்சேவையை பெறலாம்.

உரிமம் பெற்ற கழிவுநீர் லாரி இயக்குபவர்கள், கழிவுநீர் தொட்டி சுத்தம் செய்யும் சேவைக்கான அழைப்புகளை பொது மக்களிடம் இருந்து நேரடியாகவும் பெறலாம். அவ்வாறு பெறப்பட்ட அழைப்பின் விவரங்களை (பெயர்/ முகவரி/ கைபேசி எண், etc.) 14420 எண்ணில் தொடர்புகொண்டு பதிவு செய்த பின்பு தான், கழிவுநீர் தொட்டி சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட வேண்டும்.



உரிமையாளர் 6 தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களான பிரதிபலிப்பு ஆடை **(Apron)**, பாதுகாப்பு கண் கண்ணாடிகள், கம்பூட்ஸ், தலைப்பட்டை, பாதுகாப்பு கையுறை மற்றும் பாதுகாப்பு முகக்கவசம் வாங்கி லாரியில் எப்பொழுதும் இருப்பதும்,பணியாளர்கள் அதனை அணிவதும் உறுதி செய்தல் வேண்டும். மேலும் வாயு வெளியேற மின்விசிறி பயன்பாட்டிற்கு இருக்க வேண்டும்.



**விதிமுறைகளை மீறும் லாரிகளுக்கு முதன் முறைக்கு ரூபாய் 25,000/-, இரண்டாம் முறைக்கு ரூபாய் 50,000/- அபராதம் விதிக்கவும், தொடர்ந்து விதிமீறலில் ஈடுபடும் லாரிகள் பறிமுதல் செய்யவும் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.**

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்
நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

செமதொஇ/665/வரைகலை/2023